# சிறுபான்மையினர், தலித்துகள், ஆதிவாசிகள் வாக்குரிமையை இழக்கும் அபாயம்! ‘பீகாரில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்’ என்ற பெயரில் வாக்குரிமை திருட்டு!

# “பா.ஜ.க.வின் கைப்பாவையாக தேர்தல் ஆணையம் செயல்படுகிறது!” - ராகுல் காந்தி குற்றச்சாட்டு!

## “தேர்தலில் வாக்குகள் திருட்டு நடந்தது எப்படி?”- ஆதாரங்களுடன் அம்பலப்படுத்தினார்!

புதுடெல்லி, ஆக. 10-

**வாக்கு திருட்டு தொடர்பான ஆதாரங்களை மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி 7.8.2025 அன்று வெளியிட்டார். அதில் ஒரே தொகுதியில் 1 லட்சம் போலி வாக்காளர்களை சேர்த்து இருப்பதாகவும், ஒரு அறை கொண்ட வீட்டில் 80 வாக்காளர்கள் இருப்பதும், ஒரு வாக்காளருக்கு 4 வாக்குச்சாவடியில் ஓட்டு இருக்கும் ஆதாரத்தையும் ராகுல்காந்தி வெளியிட்டு குற்றம் சாட்டினார்.**

பீகார் மாநிலத்தில் இந்த ஆண்டு இறுதியில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற உள்ள நிலையில் வாக்காளர் பட்டியலில் சிறப்பு தீவிர திருத்த பணிகளை தேர்தல் ஆணையம் மேற்கொண்டது. இதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. இருப்பினும் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட இந்த நடவடிக்கையின் மூலம் 65 லட்சம் வாக்காளர்களின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன. இதனால் அதிருப்தி அடைந்த எதிர்க்கட்சிகள், நாடாளுமன்றத்தில் இந்த பிரச்னை குறித்து விவாதிக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தி வருகிறார்கள். இதனால் தொடர்ந்து இரு அவைகளும் முடங்கி வருகின்றன.

இந்த சூழலில் மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல்காந்தி, டெல்லியில் செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தி தேர்தல் ஆணையம் மீது பரபரப்பு குற்றச்சாட்டுகளை ஆதாரத்துடன் முன் வைத்தார்.

### ஒரே தொகுதியில் 1,00,250 ஓட்டுகள் திருட்டு 5 வகையான ஓட்டு திருட்டு

- ★ போலி வாக்காளர்கள் 11,965
- ★ போலி, தவறான முகவரி 40,009
- ★ ஒரே முகவரியில் வாக்காளர்கள் 10,452
- ★ புகைப்படம் இல்லாத வாக்காளர் 4,132
- ★ படிவம் 6 தவறாகப் பயன்படுத்தியது 33,692

அதன் விவரம் வருமாறு:

பெங்களூரு மத்திய மக்களவை தொகுதியில் 2024ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் காங்கிரஸ் வேட்பாளர் மன்சூர் அலிகான், பா.ஜ வேட்பாளர் பி.சி. மோகனிடம் 32,707 ஓட்டுகள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தார். இந்த தொகுதி உள்பட கர்நாடகாவில் உள்ள 28 மக்களவை தொகுதிகளில் நாங்கள் எடுத்த கணக்குப்படி 16 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெற்று இருக்க வேண்டும். ஆனால் 9 தொகுதிகள் மட்டுமே எங்களுக்கு கிடைத்தன. இது தொடர்பாக நாங்கள் நடத்திய ஆய்வில் பெங்களூரு மத்திய மக்களவை தொகுதிக்கு உட்பட்ட மகாதேவ்புரா சட்டப்பேரவை தொகுதியில் மிகப் பெரிய வாக்காளர் மோசடி நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த சட்டப்பேரவைத் தொகுதியில் ஒரு லட்சத்துக்கும் மேற்பட்ட போலி வாக்காளர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக காங்கிரஸ் மேற்கொண்ட ஆய்வில் சரியாக 1 லட்சத்து 250 போலி வாக்காளர்கள் இருப்பது கண்டறியப்பட்டது. இதில், 11,965 வாக்காளர்களின் பெயர்கள் இரண்டு முறை பதிவாகி உள்ளன. 40,009 வாக்காளர்களின் முகவரிகள் போலியானவை. 10,452 வாக்காளர்கள் ஒரு குறிப்பிட்ட முகவரியில் மொத்தமாக பதிவு செய்துள்ளனர். அதோடு, 4,132 பொருத்தமில்லாத புகைப்படங்கள் ஒட்டப்பட்டுள்ளன.

18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களை பதிவு செய்வதற்கான படிவம்6ஐ 33,692 பேர் தவறாகப் பயன்படுத்தி உள்ளனர். இந்த படிவத்தை பயன்படுத்தி வாக்காளர்கள் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் 20 வயதை கடந்தவர்கள். படிவம் 6ஐ பயன்படுத்தி 70 வயது மூதாட்டியின் பெயர் ஒரே வாக்குச்சாவடியில் 2 முறை சேர்க்கப்பட்டுள்ளது. அந்த 2 ஓட்டும் பதிவாகியுள்ளது.

ஒரே மூதாட்டி ஒரு வாக்குச்சாவடியில் எப்படி 2 வாக்கு போட்டார் என்பதை தேர்தல் ஆணையம்தான் விளக்க வேண்டும். திட்டமிட்ட ரீதியில் தேர்தல் முடிவுகளை சீர்குலைக்கும் முயற்சி இது என்பது தற்போது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பல பதிவுகளில் வீட்டு எண் 0 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒற்றை படுக்கை அறை கொண்ட முகவரியில் 46 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். ஒரு அறை கொண்ட வீட்டில் 80 வாக்காளர்கள் உள்ளனர். அந்த இடத்தைப் பார்வையிட்டபோது அங்கு யாரும் வசிக்கவில்லை. ஒரு வாக்காளருக்கு ஒரே தொகுதியில் 4 வாக்குச்சாவடியில் ஓட்டு உள்ளது. கர்நாடகாவில் ஒரே நபர் பல பூத்களில் வாக்குகளை செலுத்தியுள்ளார். இப்படி பலர் வாக்குகளை செலுத்தி உள்ளனர். இது தவிர ஒருவருக்கு மகாராஷ்டிரா, உத்தரபிரதேசத்தில் தலா ஒரு ஓட்டுகளும், பெங்களூரு மகாதேவபுரா தொகுதியில் 2 ஓட்டுகளும் உள்ளன.

இது ஒரு குறிப்பிட்ட தொகுதியில் நாங்கள் மேற்கொண்ட ஆய்வு மட்டுமே. இந்த ஆய்வை நாங்கள் செய்து முடிப்பதற்கு எங்களுக்கு 6 மாதங்கள் ஆகி உள்ளது. தேர்தல் ஆணையம் எங்களுக்கு மின்னணு தரவை வழங்குவதில்லை. ஏனென்றால் அவர்கள் நாங்கள் வாக்காளர் பட்டியலை கவனமாக ஆய்வு செய்வதை தேர்தல் ஆணையம் விரும்பவில்லை. தேர்தல் ஆணையம் எங்களுக்கு மின்னணு தரவுகளை வழங்கினால் அதை ஆய்வு செய்ய எங்களுக்கு 30 வினாடிகள் போதும். நான் மீண்டும் சொல்கிறேன், அதனால்தான் எங்களுக்கு இது போன்ற காகித தரவு வழங்கப்படுகிறது. அதனால் வாக்காளர் பட்டியலை பகுப்பாய்வு செய்ய முடியவில்லை. இந்த ஆவணங்கள் ஓசிஆர் ஆப் பயன்படுத்தி ஸ்கேன் செய்தால், அவற்றிலிருந்து தரவைப் பெற முடியாது. தேர்தல் ஆணையம் ஏன் இந்த காகிதத் துண்டுகளைப் பாதுகாக்கிறது? தேர்தல் ஆணையம் வேண்டுமென்றே




இயந்திரம் படிக்க முடியாத ஆவணங்களை வழங்குகிறது.

இயந்திரம் படிக்கக்கூடிய வாக்காளர் பட்டியலை வழங்காததும், சட்டத்தை மாற்றுவதன் மூலம் சிசிடிவி காட்சிகளை அனுமதிக்காததும், தேர்தல்களைத் திருட பா.ஜ.க.வுடன் தேர்தல் ஆணையம் கூட்டுச் சேர்ந்துள்ளது என்பதை எங்களுக்கு உணர்த்தியது. நாடு முழுவதும் வாக்கு திருட்டு நடந்ததற்கான ஆதாரங்களை அழிக்க தேர்தல் ஆணையம் முயற்சிக்கிறது. தேர்தல் செயல்முறையை சீர்குலைக்க ஜனநாயக நிறுவனங்கள் தவறாகப் பயன்படுத்தப்படுகின்றன. இது அரசியலமைப்பிற்கு எதிரான குற்றம். ஏனெனில் கடந்த 10-15 ஆண்டுகளாக இயந்திரம் படிக்கக்கூடிய தரவுகளையும், சிசிடிவி காட்சிகளையும் தேர்தல் ஆணையம் எங்களுக்கு வழங்கவில்லை என்றால், அவர்கள் குற்றத்தில் பங்கேற்கிறார்கள் என்று அர்த்தம். நாம் மிகவும் விரும்பும் தேர்தல் நடைமுறைகளில் ஜனநாயகம் இல்லாததால் நீதித்துறை இதில் தலையிட வேண்டும்.



### முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டது எப்படி?

★ காங்கிரஸ் கட்சி சார்பில் நடத்திய ஆய்வில் மக்களவை தேர்தலில் கர்நாடகாவில் உள்ள 28 தொகுதியில் 16 தொகுதிகளில் காங்கிரஸ் வெற்றி பெறும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால் 9 தொகுதியில் மட்டுமே காங்கிரஸ் வெற்றி பெற்றது.

★ பெங்களூரு மத்திய தொகுதியில் உள்ள 7 சட்டப்பேரவை தொகுதியில் மகாதேவ்புரா சட்டப்பேரவை தொகுதி முடிவு மட்டுமே காங்கிரஸ் தோல்விக்கு காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

★ இதனால் மக்களவை தேர்தலில் மகாதேவ்புரா சட்டப்பேரவை தொகுதியில் பதிவான வாக்குகள் மட்டும் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டதில் முறைகேடு கண்டுபிடிக்கப்பட்டது.

தேர்தல்களைப் பாதுகாப்பதில் காங்கிரஸ் ஈடுபட்டுள்ளது என்பதை தேர்தல் ஆணையத்திற்கு நினைவூட்ட விரும்புகிறேன். பிரதமர் மோடி மிகக் குறைந்த பெரும்பான்மையுடன் பிரதமராக உள்ளார். அவர் ஆட்சியில் நீடிக்க 25 இடங்களை மட்டுமே திருட வேண்டியிருந்தது. மக்களவை தேர்தலில் பா.ஜ.க. 33,000 க்கும் குறைவான வாக்குகளைப் பெற்று 25 இடங்களை வென்றது. நமது அரசியலமைப்பின் அடித்தளம் ஒருவருக்கு ஒரு வாக்கு கிடைக்கிறது என்ற உண்மையை அடிப்படையாகக் கொண்டது. நாம் கருத்துக்கணிப்புகளைப் பார்க்கும்போது, ஒரு நபர், ஒரு வாக்கு என்ற கருத்தை எவ்வாறு பெறுவது என்பதுதான் அடிப்படை விஷயம். சரியான நபர்கள் வாக்களிக்க அனுமதிக்கப்படுகிறார்களா? போலி நபர்கள் சேர்க்கப்படுகிறார்களா? வாக்காளர் பட்டியல் உண்மையா இல்லையா? என்று சில காலமாக பொதுமக்களிடையே சந்தேகம் உள்ளது.

ஒவ்வொரு கட்சியையும் ஆட்சிக்கு எதிரான அலை தாக்குகிறது, ஆனால் ஜனநாயக கட்டமைப்பில் ஆட்சிக்கு எதிரான அலையால் பாதிக்கப்படாத ஒரே கட்சி பாஜ மட்டுமே. இதனால்தான் தேர்தல் முடிவுகளுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள் பெருமளவில் தவறாகப் போகின்றன. அதே போல் ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் நடத்தும் உள் கருத்துக் கணிப்புகளும் பொய்த்துப்போய் விடுகின்றன. இதே போன்ற தேர்தல் திருட்டு குற்றம் நாடு முழுவதும், மாநிலத்திற்கு மாநிலம் என மிகப்பெரிய அளவில் செய்யப்படுகிறது என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்தார். தேர்தல் ஆணையம் மீது உரிய ஆதாரத்துடன் ராகுல்காந்தி தெரிவித்த குற்றச்சாட்டு நாடு முழுவதும் மிகப்பெரிய பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

*** 2024 பெங்களூரு மத்திய தொகுதி தேர்தல்**

மன்சூர்அலிகான்(காங்கிரஸ்) Vs பிசி மோகன் (பா.ஜ.க.)

பதிவான வாக்குகள்
காங்கிரஸ் 6,26,208
பா.ஜ 6,58,915
வித்தியாசம் 32,707

**மகாதேவ்புரா சட்டப்பேரவை தொகுதி**

காங்கிரஸ் 1,15,586
பா.ஜ 2,29,632
வித்தியாசம் 1,14,046




### மிகப்பெரிய உண்மை மறைப்பு

★ மின்னணு வாக்காளர் பட்டியல் தராததால் காகித அடிப்படையில் லட்சக்கணக்கான வாக்காளர்கள் சரிபார்க்கப்பட்டனர்.

★ வாக்காளர் பட்டியலை இயந்திரங்கள் மூலம் சரிபார்க்கும் வசதியை தேர்தல் ஆணையம் தரவில்லை.

★ அதனால் 7 அடி உயரத்திற்கு வாக்காளர் பட்டியல் பிரிண்ட் எடுக்கப்பட்டு மறைக்கப்பட்டு இருந்த மிகப்பெரிய உண்மை கண்டுபிடிக்கப்பட்டது.

**★ நான் சொல்வதை சத்திய வாக்காக எடுத்துக்கொள்ளுங்கள் - கர்நாடகா தலைமை தேர்தல் அதிகாரிக்கு ராகுல்காந்தி பதில்**

தேர்தல் முறைகேடு தொடர்பாக ராகுல்காந்தி கையெழுத்திட்டு புகார் அளித்தால் விசாரிப்பதாக கர்நாடகா தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்து இருந்தார். இதற்கு ராகுல்காந்தி உடனே பதில் அளித்துள்ளார். அவர் கூறும்போது, ‘நான் ஒரு அரசியல்வாதி. மக்களுக்கு நான் சொல்வது என்னுடைய வார்த்தை, கடமை. நான் அதை எல்லோரிடமும் பகிரங்கமாகச் சொல்கிறேன். அதை ஒரு சத்தியமாக எடுத்துக் கொள்ளுங்கள். இது அவர்களின் தரவு, நாங்கள் அவர்களின் தரவைக் காட்டுகிறோம். இது எங்கள் தரவு அல்ல. இது தேர்தல் ஆணையத் தரவு. சுவாரஸ்யமாக, அவர்கள் தகவலை மறுக்கவில்லை. ராகுல் காந்தி பேசும் வாக்காளர் பட்டியலில் அவர்கள் தவறு என்று சொல்லவில்லை. நான் சொன்னது தவறு என்று நீங்கள் சொல்லவில்லை?

### ஒரே வாக்காளருக்கு 4 இடத்தில் ஓட்டு

ராகுல்காந்தி வெளியிட்ட ஆதாரத்தில் ஆதித்யா வத்சவா என்ற வாக்காளருக்கு கர்நாடகாவில் மகாதேவ்புரா சட்டப்பேரவையில் 2 இடத்திலும், உத்தரபிரதேச மாநிலம் லக்னோ கிழக்கு தொகுதியில் ஒரு இடத்திலும், மகாராஷ்டிரா மாநிலம் ஜோகேஸ்வரி கிழக்கு தொகுதியில் ஒருஇடம் என்று 4 இடத்தில் வாக்கு இருந்த பட்டியலை ராகுல்காந்தி வெளியிட்டார்.

ஏனென்றால் உங்களுக்கு உண்மை தெரியும். நாடு முழுவதும் நீங்கள் இதைச் செய்துள்ளீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும்’ என்றார்.

**★ 3 மாநிலங்களிலும் வாக்கு திருட்டு**

ராகுல்காந்தி கூறுகையில், ‘கர்நாடாகாவில் நடந்தது போல் மகாராஷ்டிரா, அரியானா, மத்தியப்பிரதேச தேர்தல்களிலும் வாக்குத்திருட்டு நடந்துள்ளது. மகாராஷ்டிராவில் வெளியான தேர்தல் முடிவுகள் திருடப்பட்டன என்ற எங்கள் சந்தேகத்தை உறுதிப்படுத்தின. மகாராஷ்டிரா வாக்காளர்களின் எண்ணிக்கை அங்குள்ள 18 வயதுக்கும் மேற்பட்ட மக்கள்தொகையை விட அதிகமாக இருந்தது. இது மிகவும் ஆச்சரியமான உண்மை. மேலும் மாலை 5:30 மணிக்குப் பிறகு வாக்காளர் எண்ணிக்கையில் மிகப் பெரிய அதிகரிப்பு ஏற்பட்டது. அனைவரும் அதைப் பார்த்தார்கள். அங்கு 1 கோடி வாக்காளர்கள் புதிதாக தோன்றினார்கள். தேர்தல் ஆணையத்திடம் இதுபற்றிய தரவுகளை வழங்கியும் அவர்கள் எந்தவித பதிலும் தெரிவிக்கவில்லை.

**மகாராஷ்டிராவிலும் மோசடி உறுதி செய்யப்பட்டது எப்படி?**

★ மகாராஷ்டிரா வாக்காளர் பட்டியலில் 5 ஆண்டுகளை விட மக்களவை தேர்தல் முடிந்த அடுத்த 5 மாதத்தில் அதிக வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர்.

★ 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் எண்ணிக்கையை விட மகாராஷ்ராவில் அதிக வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர்.

★ மகாராஷ்டிரா சட்டப்பேரவை தேர்தல் தினத்தில் மாலை 5 மணிக்கு மேல் வாக்கு சதவீதம் மிகப்பெரிய அளவில் உயர்ந்தது.

★ புதிய வாக்காளர் பெயரை சேர்க்கும் படிவம் 6 தவறாக பயன்படுத்தியது 33,692 வாக்காளர்கள்

★ 70 வயது கொண்ட சுகுணா ராணி என்ற வாக்காளர் 2 மாதத்தில் தனது பெயரை படிவம் 6ஐ பயன்படுத்தி 2 இடங்களில் சேர்த்துள்ளார்.

★ சுகுணா ராணி 2 இடங்களிலும் மக்களவை தேர்தலில் தனது வாக்கை செலுத்தி உள்ளார்.

★ வாக்காளர் பட்டியலில் சுகுணா ராணியின் பெயர் மற்றும் புகைப்படம் சற்று மாறி உள்ளது.

இந்த காரணத்திற்காகத்தான் தேர்தல் ஆணையம் சிசிடிவி பதிவுகளை அவசர அவசரமாக அழித்து வருகிறது.

---

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில்**

## தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச்செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!



கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் **“தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்”** 13-08-2025 புதன்கிழமை காலை 10.30 மணி அளவில், சென்னை, அண்ணா அறிவாலயம் “கலைஞர் அரங்கில்” நடைபெறும்.

அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**பொருள் : “ஓரணியில் தமிழ்நாடு - உறுப்பினர் சேர்க்கை”**

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 600 018
நாள் : 8.8.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.



திருவெறும்பூர் அருகே உள்ள துவாக்குடி நகராட்சிக்கு உட்பட்ட அண்ணா வளைவு அருகே அய்யம்பட்டி சாலையில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் ‘உங்களுடன் ஸ்டாலின்’ சிறப்பு முகாமினை தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தார். முகாமிற்கு நகராட்சி தலைவர் காயாம்பு, தலைமை வகித்தார். நகராட்சி ஆணையர் பட்டுசாமி, திருவெறும்பூர் தாசில்தார் தனலட்சுமி, திருச்சி மாவட்ட டி ஆர் ஓ ராஜலட்சுமி, திருச்சி மாவட்ட ஆர்.டி.ஓ அருள்,சமூகத் திட்ட தனி தாசில்தார் தனலட்சுமி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.